www.Padasalai.Net www.CBSEtips.in

# மாதிரி வினாத்தாள் பொதுத்தேர்வு - 2021

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

பதிவு எண்: | | | | | | |

கால அளவு : 3.00 மணி நேரம்

மதிப்பெண்கள் : 90

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் , குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - 1

பலவுள் தெரிக. 14x1=14

I அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

II கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் எற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   (அ) யாப்பருங்கலக்காரிகை (ஆ) தண்டியலங்காரம்
   (இ) தொல்காப்பியம் (ஈ) நன்னூல்.
2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   (அ) சூரிய ஒளி (ஆ) மழை மேகங்கள்
   (இ) மழைத்துளிகள் (ஈ) நீர்நிலைகள்.
3. இவற்றை வாயிலுக்கே சென்று இன் முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது
   (அ) வக்கிரம் (ஆ) அவமானம்
   (இ) வஞ்சனை (ஈ) இவை அனைத்தும்.
4. உவாஉற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார் - யார் யார் ?
   (அ) சடாயு இராமன் (ஆ) இராமன் குகன்
   (இ) இராமன் சுக்ரீவன் (ஈ) இராமன் சபரி.
5. 'குழிமாற்று ' எத்துறையோடு தொடர்புடைய சொல் ?
   (அ) இலக்கியம் (ஆ) கணிதம்
   (இ) புவியியல் (ஈ) வேளாண்மை.
6. பொருத்துக.
   அ) ஆமந்திரிகை - 1.பட்டத்து யானை
   ஆ) அரசு உவா - 2.மூங்கில்
   இ) கழஞ்சு - 3.இடக்கை வாத்தியம்
   ஈ) கழை - 4.எடை அளவு
   (அ) 3142 (ஆ) 4213 (இ) 1234 (ஈ) 4321.
7. காய்நெல் - இச்சொல்லுக்கான இலக்கணக்குறிப்பு தருக.
   (அ) உம்மைத் தொகை (ஆ) பண்புத் தொகை
   (இ) வினைத் தொகை (ஈ) உவமைத் தொகை.
8. கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்படுபவர் யார் ?
   (அ) வள்ளலார் (ஆ) எச்.ஏ.கிருட்டிணனார்
   (இ)தண்டி (ஈ) இளங்கோவடிகள்.

9. அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.

(அ) ஈறுபோதல் , தன்ஒற்று இரட்டல் (ஆ) ஈறுபோதல்,இனம்

(இ) ஈருபோதல் முன்னின்ற மெய்திரிதல். (ஈ) ஈறுபோதல் இனம் மிகல்

10 . சுரதா நடத்திய கவிதை இதழ்

(அ) விண்மீன் (ஆ) இலக்கியம்

(இ) காவியம் (ஈ) உளர்வலம்.

11. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் " - இத்தொடர் உணர்த்தும் பண்பு.

(அ) நேர்மறைப் பண்பு (ஆ) எதிர்மறைப் பண்பு

(இ) முரண் பண்பு (ஈ) இவை அனைத்தும்.

12 .சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

(அ) நிரல் நிறை அணி (ஆ) உருவக அணி

(இ) ஏகதேச உருவக அணி (ஈ) உவமை அணி.

13.' உரிமைத் தாகம்' - கதையின் ஆசிரியர் யார் ?

(அ) பூமணி (ஆ) பாரதியார்

(இ) உத்தம சோழன் (ஈ) தோப்பில் முகமதுமீரான்

14 Metro Train என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தருக.

(அ)நடை மேடை (ஆ) இருப்புப்பாதை

(இ) பயணச்சீட்டு ஆய்வர் (ஈ) மாநகரத்தொடர் வண்டி

பகுதி -II

. **.இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும் .**

பிரிவு- I **3x2=6**

15.' நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது' விளக்கம் தருக .

16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப் படுத்துகிறார் ?

17. வசனம் , கவிதை வேறுபாடு தருக .

18. இறைமகனாரின் இன்னைலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினார் ?

பிரிவு -2 **2x2=4**

**எவையேனும் இரண்னுக்கு விடை தருக .**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக .

20. புக்கில் , தன்மனை - சிறுகுறிப்புப் தருக.

21 . பருவத்தே பயிர் செய் நேரமேலாண்மையோடு பொருத்தி எழுதுக

**பிரிவு -3**

**எவையேனும் ஏழனுக்கு விடைதருக.** **7x2=14**

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று.

அ. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சிக்கோ

ஆ. வூட்டாண்ட வெளையாண்ட குயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?

23. கீழ்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்கள் அமைக்க

அ. தானே ஆ.முன்

24. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க

தலை - தழை

25. தொடரில் உள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக .

அ. பனைமட்டையில் கூரை வைத்திருந்தான்

ஆ. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்

26. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக .
அ. தாமரை இலை நீர் போல
ஆ. அச்சாணி இல்லாத தேர்போல

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக .
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தைபோல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ. அமர்ந்தனன் ஆ. செய்த

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக .
அ. செந்தமிழே ஆ. பூம்பாவாய்

30. வெண்பாவிற்கு உரிய தளைகள் யாவை?

## பகுதி - 3

**ஐந்து வரிகளுக்கு மிகாமல் விடைதருக .**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடைதடுக** **2x4=8**

31. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக .
32. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப் படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.
33. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக .
34. யானை புக்கபுலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே +
உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக .

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** **2x4=8**

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடதத்க்க ஒரு பண்பாகும் விளக்குக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடாச்சியே இன்றையக் கூட்டுக்குடும்பம் என்பதை விளக்குக.
37. நேர மேலாண்மை குறித்து இறையன்பு கூறுவது யாது
38. நீங்கலள் ஆசிரியரானால் மாணாக்கரது ஆளுமையை அன்பினால் எவ்வாறு நெறிப்படுத்துவீர ?

### பிரிவு-3

**எவையேனும் மூன்றனுக்கு விடைதருக.** **3x4=12**

**குறிப்பு: வினா எண் 43-ல் காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.**

39. பொருள் வேற்றுமையணி அல்லது தொழில் உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக

முச்சங்கங் கூட்டி முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச் சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம் அமைத்த
பெருமாட்டி!

-கண்ணதாசன்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக. (எவையேனும் ஒன்று மட்டும்)
கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

(அ)

வாய்மையே வெல்லும்

42. செவியறிவுறா துறையைச் சான்றுடன் விளக்குக.

43. தமிழாக்கம் தருக.

1. A new language is anew life.
2. Knowledge of language is the door way towisdom.
3. If you can dream it you can do it
4. Prevention is better than cure.

**காதுகேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா**

**பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைஎழுதுக**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொடு கலை மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாக உள்ளது பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல் அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும் . குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவேரகளது மொழியும் வளச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர் மாணவராகவும் உள்ளனர் மொழியை வளர்ப்பவரும் மக்களே.மொழியால் வளர்பவரும் மக்களே

வினாக்கள்

1. மக்கள் படைத்துக் காக்கும் அரியதொருகலை எது ?
2. பெற்ற தயின் முதல் வேட்கை எது ?
3. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது ?
4. மொழியை வளர்ப்பவரும் பொழியால் வளர்பவரும் யாவர்?

*பகுதி 4* **3x6=18**

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடைதருக :**

44. அ. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிகளுடன்கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக:

**(அ)**

ஆ.செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45 அ. பண்டைய காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

**(அ)**

ஆ.சங்ககால கல்வெட்டை அறிந்துகொள்ள புகளூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது ? விளக்குக

46. உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்தால் ... கதையை தொடர்ந்து எழுதி முடிக்க

**(அ)**

மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக

**பகுதி v**

47 அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக **4x2=6**

அ " துன்பு உளது" - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ மிகும் - என முடியும் குறட்பாவை எழுதுக